மலர் : 1, இதழ் : 2

E - ISSN 2456 - 5571

# வளர் தமிழ் ஆய்வு

## (பன்னாட்டு ஆய்விதழ்)

யாதும் ஊரே

யாவரும் கேளிர்

முதன்மைப் பதிப்பாசிரியர்

**முனைவர் சி. மைக்கேல் சரோஜினி பாய்**

**வளர் தமிழ் ஆய்வு மன்றம்**

திண்டுக்கல்

**2022**

40. **சௌ.மோதிலால் நேரு**
வருங்காலச் சந்ததியினருக்கான கள ஆய்வு மனிதநேயப் பாதை 146

41. **சி.மைக்கேல் சரோஜினி பாய்**
குடும்ப வன்முறை: பதிவும் தீர்வும் தியாகபூமி நாவலை முன்வைத்து 151

42. **சி.யசோதா**
சூழலியற் பண்பாட்டு ஆய்வு நோக்கில் திருக்குறள் 155

43. **மோ. யுவராஜ்**
வேதாத்திரியத்தில் பாலியல் சமன்பாடுகள் 158

44. **பா.ரதிதேவி**
சங்க இலக்கியங்களில் கையறு நிலை 161

45. **பா. ரம்யா**
பாதவர்களின் தொழிற்கருவிகள் 165

46. **ரா.ரமேஷ்**
எஸ்.அர்ஷியாவின் 'மொய்' சிறுகதையில்
'தாய்மாமனின் சீர்வரிசை' குறித்த பதிவுகள் 171

47. **த.ரவிசந்திரன்**
'சிறுஇசை' வழி வண்ணதாசனின் இயற்கைச் சூழல் 175

48. **க.ராமசாமி**
கோஹா : உலகின் முதல் திறந்த மூல நூலக மேலாண்மை மென்பொருள் 178

49. **கா. ராஜேஷ்**
பாரதியார் கட்டுரைகளில் வெளிப்படும் பெண் விடுதலைக் குறிப்புகள் 182

50. **ந.ராஜேஸ்வரி**
வேதாத்திரி மகரிஷியின் "ஆசை சீரமைத்தல்" 186

51. **அ. ராஜன்**
பெருமாள் முருகனின் கங்கணம் புதினம் விவாதிக்கும்
திருமண ஏக்கங்களும் கள யதார்த்தங்களும் 188

52. **சு.ரேணுகா**
"கண்ணகியின் சினம்"- வழக்குரை காதையிலும்
கொங்கைத் தீ நாடகத்திலும் - ஒப்பீடு 192

53. **நா. ரேணுகா**
தாமோதரமும் சாமிநாதமும் 195

54. **க.ரேவதி**
மண்ணும் மனிதர்களும் 199

55. **க. லதா**
பாரதியின் பாடல்களில் வானியல் 202

56. **ப.லிங்கம்**
நாலடியார் நவிலும் நிலையாமை 206

57. **சு.லோகிதா**
பாவாணரின் கருத்து வெளிபாட்டு உத்தி 210

58. **அ.வளர்மதி**
அகத்திணைக்கொள்கைகள்-ஒரு பார்வை 213

59. **வாசுகி ஜெயரத்னம்**
ஓஷோவின் கருத்தியலில் பெண்-அதிகாரப்படுத்துதல் 218

# மண்ணும் மனிதர்களும்

**முன்னுரை**

உலகெங்கிலும் உள்ள மனிதர்கள் இயற்கையை பயன்படுத்தத் தொடங்கி பின்பு பாழ்படுத்தினர். அண்மைக்காலமாக இயற்கையை அழிக்கவும் தொடங்கிவிட்டனர். தமிழன் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தலென நிலங்களை பகுத்தும் ஆறு, ஏரி, குளம், பொய்கை, வாவி, உறைகிணறு, சுனை என நீர்நிலைகளையும் உருவாக்கி;க் காத்தும் வந்தான். இன்று தண்ணீர் விலையான தோடு மூன்றாம் உலகப்போர் தண்ணீரின் பொருட்டு நிகழலாம் எனும் சூழலை நாம் உருவாக்;கிவிட்டோம். இச்சூழலில் பல்வேறு சாகித்திய அகாடமி (2019) விருது பெற்ற சோ.தர்மனின் சூல் நாவலில் இடம்பெறும் வேளாண்மைச் சிந்தனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**இலக்கியமும் இயற்கையும்**

சங்க இலக்கியம் இயற்கையைப்பாடு பொருளாகக் கொண்டது எனில் அது மிகையன்று.

"குளம்தொட்டு காவு பதிந்து வழிசீத்து
உளம்தொட்டு உழுவயல் ஆக்கி - வளம்தொட்டுப்
பாகுபடும் கிணற்றோடு என்று பாதை வகுத்தோன்
ஏகும் சுவர்க்கத்து இனிது" (பா.எ.64)

என்று இயற்கையைப் பேணுபவன் அடையும் பேறுகளைப் பட்டியலிட்டது. புறநானூற்றில் பாரியின் மறைவைச் சுட்டி வருந்தும் கபிலர்,

"எண்நாள் திங்கள் அனைய கொடுங் கவைத்
தெண்ணர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ" (புறம்.118)

என்று பாரியின் மறைவினால் இயற்கை பாழாகும் என்று வருந்துகிறார். பரிபாடலில் வையையில் மக்கள் நீராடியதால் நீர் கலங்கியதைக் கண்ட அந்தணர் வருந்தினர் எனும் குறிப்பிலிருந்து அன்றைய மக்களும் மன்னர்களும் இயற்கையைப் பாதுகாத்ததை அறிய முடிகிறது. புனல் விளையாடலை காப்பியத்தின் இலக்கணக்கணமாகியது. இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். இன்றைய சூழலில் இயற்கையைப் பாதுகாப்பது படைப்பாளனின் கடமையாகின்றது. தர்மனின் சூல் புதினம் வேளாண்மைச் செய்திகளை விவசாயிகளின் மண், மழை குறித்த அறிவை ஆற்றலைச் சுட்டும் ஆவணமாகத் திகழ்கிறது. விருதுகளோடு பல்வேறு விமர்சனங்களையும் இப்புதினம் பெற்றுள்ளது.இப்புதினத்தின் மண்ணின் மைந்தர்களை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**மழை வளம்**

இப்பூமியானது இயற்கை வளங்கள் நிறைந்தது. அவற்றுள் மழை மனித சமூகம் வாழ இன்றியமையாதது. நாகரிக வளர்ச்சியினால் மனிதன் மழை, வெயில், காற்றின் அளவிடும் கருவிகளைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தி வருகிறான். சூல் புதினத்தில் இடம்பெறும் முத்துவீரன் தாத்தா எனும் கதைமாந்தரை தர்மன் நம் மண்ணின் மைந்தர்கள் இயற்கையை உற்று நோக்கி அவ்வியற்கையிடமிருந்து கற்ற கருத்துக்களை இப்புதினத்தின் பல இடங்களில் வெளிப் படுத்தியுள்ளார். பருவமழை, காற்று, மண்ணை வளமாக்கும் முறைகளை அறிந்து கொள்ள உதவுவதாக இப்புதினம் அமைந்துள்ளது. பறவைகளும் விலங்குகளும் இயற்கையோடு இணைந்து வாழ்பவை இப்புதினத்தில்,

மரங்களில் கூடுகட்டும் பறவைகள் அநேக மரங்களில் உச்சிக்கொப்பில் கூடுகள் கூடியிருந்தால் அந்த வருஷம் மழை ஜாஸ்தி. மரங்களில் உள்ள தாடிக் கொப்புகளில் கூடுகள் நிறையக் கூடியிருந்தால் அந்த வருஷம் மழை மத்துவம் (பக்.7) என்று முத்துவீரன் தாத்தாவின் கூற்றிலிருந்து அறிந்து

முனைவர் க.ரேவதி உதவிப் பேராசிரியர் பாத்திமா கல்லூரி, மதுரை


E-ISSN 2456-5571